| O.S.No. 180/2023 | PW :2 திரு.ரவிச்சந்திரன் த/பெ. திரு.நாராயணன் | 04-06-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1,3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

1. தாவா சொத்தினை 2013 ம் வருடம் கிரையம் வாங்கினேன். தாவா சொத்தினை நான் 1 முதல் 8 பிரதிவாதிகள் சேர்ந்து கிரையம் வாங்கினோம். என்னுடன் சேர்ந்து வாங்கிய முனுசாமியின் பாகத்தினை 1ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியபிள்ளை கிரையம் வாங்கினார். 1ம் வாதி அவரது பாகத்தை பிரித்து தரும்மாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். நான் பலமுறை பிரதிவாதிகளிடம் பாகம் பிரித்துக்கொடுக்கசொல்லி கேட்டேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை பிரதிவாதிகள் தப்பு கிரையம் செய்ய முயற்சிக்கிறார்கள் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நானும் பிரதிவாதிகளும் தனிப்பட்ட உபயோகத்திற்காகத்தான் வாங்கினோம். விற்பனை செய்வதற்காக வாங்கவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு போதிய அவகாசம் தராமல் அவசரஅவசரமாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாகத்தினை பிரித்தளிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

**குறுக்குவிசாரணை** :

(2, 7, 8 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**